**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 233/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா. 3 |
| Name | : | திரு. கதிர்வேல் |
| Husband Name: | | திரு. முருகையன் |
| Village | : | ஒலைப்பாடி |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 65 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.08.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் 1, 2 ஆஜர் இல்லை அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 யை தெரியும். எதிரிகள் இளையராஜா, ராமசாமி, தங்கதுரை ஆகியோரை தெரியும். வழக்கு சம்பவத்திற்கு முன்பாக அ.சா.1 சுமதிக்கும் எதிரி இளையராஜாவிற்கும் இடையே சொத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. சம்பவத்திற்கு 2 நாட்களுக்கு முன்பு எதிரி இளையராஜா, எதிரிகள் ராமசாமி மற்றும் தங்கதுரையிடம் சொல்லி சொத்துப்பிரச்சனையில் நான் சொல்வதற்கு சம்மதிக்கவில்லை என்றால் சங்கை அறுத்து கொன்றுவிடுவதாக அ.சா.1 சுமதியை மிரட்டினார். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு இரவு சுமார் 7 மணியளவில் வாலாம்பாள் வீட்டு அருகிலேயே எதிரி தங்கதுரை, ராமசாமி மற்றும் இளையராஜா ஆகியோர் வாலாம்பாளையையும், சுமதியையும் முடியை பிடித்து இழுத்து அடித்தனர். எதிரி தங்கதுரை சுமதியின் கழுத்தை பிடித்து இன்னும் 2 நாளில் உன்னை கொன்றுவிடுவேன் என்றும் மிரட்டினர். சுமதி கீழே விழுந்து விட்டார். பின்னர் 108

ஆம்புலன்ஸ் மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிசிக்சைக்காக அனுப்பி வைத்தனர். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரியின் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.